## <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

## <u>அ.வ.எண்.33/2025</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **07.11.2025** |
| **பெயர்** | **செல்வராஜ்** |
| **த/பெ** | **சிதம்பரம்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 03.43.p.m**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

1ம் மற்றும் 2ம் பிரதிவாதிகள் தாவா சொத்தின் ஸ்வாதீனத்தில் தான் உள்ளார்கள் என்றால் சரிதான். நான் கிரைய ஒப்பந்தம் போடும் காலத்திற்கு முன்பே அவர்கள் தாவா சொத்தில் அனுபவத்தில் தான் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அவ்வாறு ஒரு பெரும் தொகைக்கு கிரையம் ஏற்படுத்துவதற்கு முன்பு 1 மற்றும் 2–ம் பிரதிவாதிகளிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். நானும் எனக்கு விற்பனை செய்தவரும் தான் உடன் சென்று கிரையம பெற்று பிரதிவாதிகளிடம் தெரியபடுத்தினோம்.

அதற்கு பிரதிவாதிகள் என்ன பதில் அளித்தார்கள் என்றால் சொத்தினை என்னை வாங்க சொல்லியும் காலி ஸ்வாதீனத்தை என்னிடம் ஒப்படைப்பதாக கூறினார்கள். அதற்கு முன்பாகவே பிரதிவாதிகளை தாவா சொத்திலிருந்து காலி செய்ய கூடாது என வழக்கு தொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான். மேற்கூறியவாறு பிரதிவாதிகள் கூறியதற்கு ஏதேனும் சாட்சிகள் உண்டா என்றால் யாரும் இல்லை. அதனால் இந்த வழக்கிற்காக நான் மேற்கூறிய பதிலை ஜோடித்து கூறுகிறேன் என்றால் சரியல்ல.

மேற்கூறிய சங்கதியை எனது வழக்குரையிலோ அல்லது எனது பிரமாணவாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. சாட்சி தற்போது மாற்றி தனது பிரமாண வாக்குமூலத்தை பார்வையிட்ட பிறகு அதில் குறிப்பிடவில்லை என கூறுகிறார். ஆரம்ப காலத்திலிருந்தே வழக்கு சொத்தினை வாங்க வேண்டும் என்று எனக்கு எண்ணம் இருந்தது என்றால் சரிதான். 02.06.2006 தேதியிட்ட கிரைய

ஒப்பந்தத்தை எனது கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. எனது கிரைய பத்திரத்தில் என்னுடைய கிரைய ஒப்பந்தம் தான் ஆதாரம் என குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த ஒப்பந்தம் குறித்து கிரைய பத்திரத்தில் குறிப்பிடாமல் இருந்ததற்கான காரணம் என்ன என்றால் அவசியமில்லை என்பதால் குறிப்பிடவில்லை.

ஏன் அவசியமில்லை என்றால் எனக்கு விற்பனை செய்தவருக்கும் எனக்கும் எந்தவித பினக்கும் இல்லாத காரணத்தினால் அவசியமில்லை. நானும் எனக்கு கிரையம் செய்தவரும் மோசடியாக இந்த கிரைய பத்திரத்தை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. எதற்காக பவர் மூலமாக கிரையம் ஏற்படுத்தப்பட்டது என்றால் எனக்கு அவசியம் அதனால் முகவர் மூலம் ஏற்படுத்தினோம். என்ன அவசியம் என்றால் சாட்சி இந்த கேள்விக்கு பதில் சொல்ல தெரியவில்லை என கூறுகிறார். பொது அதிகாரப்பத்திரத்தில் கிரைய ஒப்பந்தம் குறித்து ஏதேனும் வாசகம் உள்ளதா என்றால் இல்லை. அதற்கான காரணம் என்ன என்றால் தெரியவில்லை.

என்னுடைய கிரைய பத்திரத்தில் அன்றைய தேதியில் ஏதேனும் கிரைய தொகை கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை, ஏற்கனவே ரூ.50,76,000 பணம் கொடுத்துவிட்டேன் என்பது பதிவு செய்யப்பட்டுவிட்டது. ஏற்கனவே ஏற்படுத்தி கொண்ட கிரைய ஒப்பந்த அடிப்படையில் தான் எனது மகன் பெயரில் நான் பவர் பத்திரம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தத்தின் படி எனது மகனுக்கு பவர் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு விவரங்கள் பவர் பத்திரத்தில எழுதப்பட்டுள்ளதா என்றால் சாட்சி இந்த கேள்விக்கு பதில் சொல்ல தெரியவில்லை என்று கூறுகிறார்.

நான் கிரையம் பெற்ற பிறகு பிரதிவாதிகளை சந்தித்தேனா என்றால் வழக்கு சொத்தில் உள்ள இடத்திலேயே அவர்களை சென்று சந்தித்தேன். கிரையம் பெற்று எத்தனை ஆண்டுகளுக்கு பிறகு சந்தித்தேன் என்றால் கிரையம் பெற்ற உடனே சென்று சந்தித்தேன். நான் மட்டும் சென்றேனா அல்லது வேறு ஏதவாது சாட்சிகளுடன் சென்றேனா என்றால் ஞாபகம் இல்லை. 2012 ல் எனக்கும், பிரதிவாதிகளுக்கும் எந்தவித விரோதமும் இல்லை. அந்த கால கட்டத்தில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த மற்றொரு வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான்.

அவ்வாறு இருக்கையில் அந்த சமயத்தில் நான் பிரதிவாதிகளிடம் கேட்டு இருக்க இயாலது என்றும், வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் கிரையபத்திரம் ஏற்படுத்திய பிறகு பிரதிவாதிகளின் ஸ்வாதீனத்தில் இடையூறு செய்த காரணத்தினால் என் மீது குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதன் பெயரில் என்னை கைது செய்தார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் ரூ. 5 கோடி கேட்டு

என்னை கட்டாயப்படுத்தினார்கள் அதனை கொடுக்க முடியாது என மறுத்ததன் பெயரில் என்னை கைது செய்தார்கள். மேற்கூறிய சங்கதிக்கு ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் காவல் நிலையத்தில் நடைபெற்ற சம்பவம் இது அதுவே போதுமாக சாட்சியம் ஆகும்.

எனது பிரமாண வாக்குமூலத்தில் 2, 3 மற்றும் 4 பத்தியில் குறிப்பிட்டுள்ளது போல் நாகராஜன் என்பவருக்கு மேல் வாடகைக்குவிட்டதை நிரூபிக்க என்னிடம் ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் எழுத்து மூலமான ஆதாரம் உள்ளன. அந்தவிதமான எந்த ஆதாரங்களையும் நீதிமன்றத்தில் குறியீடு செய்யவில்லை என்றால் தற்போதும் என்னிடம் தான் உள்ளது. எழுத்து மூலமான ஆதாரங்கள் தான் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் என்பதால் வாய்மொழியாக கூறும் சாட்சியகளை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாது என்றால் சரியல்ல.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 04.22.p.m.**